(ஆ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991ஆம் ஆண்டு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு. இதனை பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். " எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : சட்டமுன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

5. விதி 110-இன் கீழ் உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை.

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடைபெற இருப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இப்போது அவர் அறிக்கையை அளிப்பார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110ன் கீழ் ஓர் அறிக்கையை அவைக்கு வைக்கிறேன். '' சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்லுவோம் '' என்று உதட்டளவில் சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. '' செய்வதைத்தான் சொல்வோம் '' என்ற தாரக மந்திரமே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்குக் கொடுத்துள்ள கட்டளையாகும். இதை நிறைவேற்றுகிற வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்றவுடனே மக்களுக்குக் கொடுத்திருக்கிற வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற வகையில், முதல் வேலையாக மலிவு விலை மதுக் கடைகளை 15—7—1991 முதல் மூடிவிடும்படி ஆணையிட்டிருக்கிறார்கள். மலிவு விலை மதுக்கடைகளை மூடுவதால் அரசுக்கு எவ்வளவு வருமான இழப்பு என்பதைப் பாராமல் கோடிக்கணக்கான தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதே மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் லட்சியமாகும். பாமர மக்களை அழிவுப் பாதையிலிருந்து மாற்றி, ஆக்கப் பாதைக்கு அழைத்துச் செல்வதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கையாகும் இது. இதனால் ஏற்படுகிற வருமான இழப்பினையும் மக்கள் மேல் சுமத்தாமல் ஆக்கபூர்வமான வழிகளில் இழப்பினை ஈடு கட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், புரட்சித் தலைவி அவர்கள் அரசு தகுந்த ஏற்பாடுகளைச் செய்யும். இதன் பிரதிபலிப்பாக ஆங்காங்கே கள்ளச் சாராயம் காய்ச்ச முயற்சி செய்கிற சமூக விரோதிகள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

10-00 மணி

நகரங்களுக்கு இணையாகக் கிராமங்களின் நிலையை உயர்த்துவதை இலட்சியமாகக் கொண்டு கிராமப்புற வளர்ச்சித் திட்டங்கள் மாற்றி அமைக்கப்படும். கிராமங்களில் அடிப்படைத் தேவைகளான இணைப்புச் சாலைகள், குடிநீர், தெரு விளக்கு, சுகாதார மேம்பாடு, கல்வி போன்றவற்றை முழுவதுமாக நிறைவேற்ற இந்த அரசு போர்க்கால நடவடிக்கை எடுக்கும்.

சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் என்று ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ஒரு கோடிக்குக் குறையாத அளவுக்கு ஒதுக்கீடு செய்து கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவோம்.

உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கு முழுமையான உரிமையும், அதிகாரமும் வழங்கப்படும். உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்குரிய வழி வகைகளை இந்த அரசு அமைத்துக் கொடுக்கும்.

மக்கள் இந்த அரசைத் தேடி வர வேண்டியது இல்லை. இந்த அரசு மக்களைத் தேடிச் சென்று அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றும். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு இந்தியாவிலேயே, ஏன் உலகத்திலேயே பல்வேறு மக்களின் ஒருமித்த வாக்குகளைப் பெற்று இருக்கின்ற, பெறக் கூடிய ஒரே தலைவர் மக்கள் தலைவி, ''தி மாஸ் லீடர்'' மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தான் (மேசையைத் தட்டும் ஒலி). எனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், மக்கள் தனக்குக் கொடுத்திருக்கிற கடமைகளை ஏற்கின்ற அளவுக்கு எந்தவிதக் குறையும் இன்றி, அவைகளை நிறை வேற்றுகின்ற அடிப்படையில்தான் இந்த வருடம் செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்தி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி அமைத்து, மக்கள் பயன் அடைவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். அதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் விரைவில் நடத்தப்படும் என்பதனை இந்த மாமன்றத்தின் வாயிலாக, தமிழக மக்களுக்குத் தெரியப் படுத்திக்கொள்கிறேன்.

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, A clarification under rule 110.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110-ன் கீழ் விளக்கம் ஒன்றும் கேட்க முடியாது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: அதே 'connected rules தான்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, தேர்தல் செப்டம்பர் முதல் வாரத்திற்குள் நடத்தி முடிக்கப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110(2)-லே There shall be no debate on such statement at the time it is made என்று இருக்கிறது.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: It is not a debate. After the statement is made, the Speaker may permit a supplimentary question on the subject matter.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது விதி 111. இதில் 'கிளாரிபிகேஷனுக்கு' இடம் இல்லை. ஏற்கனவே அவைக்கு ஒரு கேள்விக்குப் பதில் சொல்லிய அமைச்சர், அந்தப் பதிலுக்கு ஒரு திருத்த அறிக்கை வைக்கும்போது தான் வரும். இது 110. 111-ன்படி ஏற்கனவே ஒரு கேள்விக்கு பதில் அளித்த அமைச்சர், அந்தப் பதிலைப் பிறிதொரு நாள் அல்லது அன்றே மாற்றி, திருத்தி இன்னொரு அறிக்கை வைத்தால், அந்த அறிக்கையிலே தான் நீங்கள் சொல்லக்கூடியது வரும். (குறுக்கீடு) இதில் கிளாரிபிகேஷனுக்குக் கூட இடம் இல்லை.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: I leave it to the Speaker.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் இன்று முன்மொழியப்பட்டு, வழிமொழியப்பட வேண்டும். திரு. மா. சுந்தரதாஸ்

Thiru. M. SUNDARADOSS: I move the following amendment; "Add at the end the following;
but regret to note that no mention is made about:-
(1) any scheme to deepen and utilise the Buckingham canal in Madras City into a major navigational system for transportation of goods;
(2) making the beach at Madras City a pleasant place as it was before."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழிமொழிவோர் யாரும் இல்லையா.

10-05 மணி

திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்: I second it.

திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பெற்றெடுத்த தாயினும் மேலாக என்னை ஆளாக்கி இந்தச் சட்டமன்றத்திற்கு வருவதற்குரிய வாய்ப்பினை தந்த தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பாதக் கமலங்களிலே என்னுடைய நன்றிகளைக் காணிக்கை ஆக்குகிறேன். வணக்கத்திற்குரிய பத்மநாபபுரம் தொகுதிவாழ் வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும் இந்தத் தருணத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்ட மக்களுடைய நல் வாழ்வுக்காக உழைத்த குமரித் தந்தை மார்ஷல் நேசமணி அவர்களையும் அருமை தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களையும் இந்த நேரத்தில் நான் நினைவுகூரக் கடமைப்பட்டு இருக்கிறேன்.